
**ஏப்ரல் – 18**

# TNPSC துளிகள்

- தாக்கம் மற்றும் தலைமைத்துவத்தின் அடிப்படையில் உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்களை அங்கீகரிக்கும் 2026 ஆம் ஆண்டிற்கான TIME100 பட்டியலை டைம் இதழ் வெளியிட்ட நிலையில் இதில் ஷி ஜின்பிங் (14வது முறை), டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருடன், இந்திய ஆளுமைகளான சுந்தர் பிச்சை, விகாஸ் கண்ணா மற்றும் ரன்பீர் கபூர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.
- கோதுமை மற்றும் நெல்லுக்கான உலகளாவியப் பண்ணை நிலைத்தன்மை மதிப்பீடு (FSA) 3.0 சான்றிதழை பெற்று உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறும் இந்தியாவின் முதல் நிறுவனமாக ITC நிறுவனம் மாறியது.
- குஜராத்தின் தோலேராவில் டாடா குறைக்கடத்தி உற்பத்தி தனியார் துறை நிறுவனத்திற்கான முதல் குறைக்கடத்தி சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு (SEZ) இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய கிராண்ட்மாஸ்டர் ஆர். வைஷாலி 2026 ஆம் ஆண்டிற்கான FIDE மகளிர் கேண்டிடேட்ஸ் போட்டியில் வெற்றி பெற்று, மகளிர் உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்திற்கான போட்டியாளராகத் தகுதி பெற்றுள்ளார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சிவாஜி மற்றும் அப்சல் கான் குறித்த கல்வெட்டுகள்





- பிரகதீஸ்வரர் கோயில் கல்வெட்டுகள் சிவாஜி மற்றும் அப்சல் கானுக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க போரை விவரிக்கின்றன.
- மராத்தி மொழியில் எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டுகள், விநாயகர் சன்னதிக்கு அருகிலுள்ள தென்மேற்குச் சுவர்களில் அமைந்துள்ளன.
- இவை இரண்டாம் சரபோஜி மன்னரின் காலத்தைச் சேர்ந்தவை மற்றும் போன்ஸ்லே வம்சத்தின் வரலாற்றைப் பதிவு செய்கின்றன.
- மகாராஷ்டிராவின் ஜவாலி கோட்டையில் நடந்த சந்திப்பின் போது சிவாஜி, புலி நகத்தைப் பயன்படுத்தி அப்சல் கானை எவ்வாறு கொன்றார் என்பதை அவை

விவரிக்கின்றன.

- மருது சகோதரர்களுக்கு எதிரான போரின் போது ஆங்கிலேயர்களுக்கு இரண்டாம் சரபோஜி அளித்த ஆதரவையும் இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.
- மேலும், டேனிஷ் மிஷனரியான பிரடெரிக் கிறிஸ்டியன் ஸ்வார்ட்ஸ் மற்றும் தஞ்சாவூரில் மராத்தியர்களின் ஆட்சி குறித்த குறிப்புகளும் இவற்றில் இடம் பெற்று உள்ளன.

## தமிழ்நாடு அரசியல் மாற்றம் 1967

- 1967 ஆம் ஆண்டுத் தேர்தலின் மூலம் திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) தமிழ்நாட்டில் முதல்முறையாக ஆட்சி அமைத்தது.
- சுதந்திர இந்தியாவில் ஒரு மாநிலக் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸைத் தோற்கடித்து ஆட்சிக்கு வந்தது அதுவே முதல் முறையாகும்.
- முன்னதாக 1962 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் காஞ்சிபுரம் தொகுதியில் சி.என். அண்ணாதுரை அவர்கள், எஸ்.வி. நடேச முதலியாரிடம் சுமார் 10,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்திருந்தார்.
- 1967 ஆம் ஆண்டில், அண்ணாதுரை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை; மாறாக தென் சென்னை மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- சட்டமன்றத்தில் திமுக அமோக பெரும்பான்மையைப் பெற்ற பிறகு, அண்ணாதுரை முதலமைச்சரானார்; பின்னர் சட்ட மேலவை உறுப்பினரானார்.
- 1967 ஆம் ஆண்டு முதல், எந்த ஒரு தேசியக் கட்சியும் தமிழ்நாட்டில் தனித்து ஆட்சி அமைக்கவில்லை.




# தேசியச் செய்திகள்

## அரசியலமைப்பு (131வது திருத்த) மசோதா, 2026

- 2026 ஆம் ஆண்டிற்கான அரசியலமைப்பு (131வது திருத்த) மசோதா, 251 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மற்றும் 185 பேரின் எதிர்ப்புடன் வாக்கெடுப்புக்குப் பிறகு,

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 அன்று மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

- இது மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் மேக்வாலால், தொகுதி மறுசீரமைப்பு மசோதா, 2026 மற்றும் ஒன்றியப் பிரதேசச் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2026 ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட ஒரு தொகுப்பாக அறிமுகப்படுத்தப் பட்ட நிலையில் மற்ற இரு மசோதாக்களும் இந்தத் திருத்தத்தையே சார்ந்துள்ளன.
- இம்மசோதா அரசியலமைப்பின் 81, 82, 170, 332 மற்றும் 334A ஆகிய சரத்துகளில் திருத்தங்களை மேற்கொள்ள முன்மொழிகிறது.
- இது மக்களவையின் பலத்தை அதிகபட்சமாக 850 உறுப்பினர்களாக உயர்த்த இலக்கு வைத்துள்ளது; இதில் மாநிலங்களில் இருந்து 815 வரையிலும் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து 35 வரையிலும் அடங்கும்.
- முன்னதாக, சரத்து 81 ஆனது மக்கள்தொகையின் அடிப்படையில் மக்களவையின் பலத்தை மாநிலங்களில் இருந்து 530 உறுப்பினர்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து 20 உறுப்பினர்கள் என வரம்பிற்குள் வைத்திருந்தது.
- 1976 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்த, மக்கள்தொகை அடிப்படையிலான இட மறுசீரமைப்பு மீதான நீண்டகாலத் தடையை இது நீக்குகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்குப் பிறகு வரும் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்புக்காகக் காத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்குவதன் மூலம், தொகுதி மறு சீரமைப்பை உடனடியாக மேற்கொள்ள இது அனுமதிக்கிறது.
- இட ஒதுக்கீட்டிற்கான மக்கள்தொகை, நாடாளுமன்றத்தால் தீர்மானிக்கப்படும் ஒரு மக்கள்தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டது என இது கூறுகிறது.
- தொகுதி மறுசீரமைப்புப் பொறுப்பை நாடாளுமன்றத்தின் முடிவிற்கு விடுவதற்குப் பதிலாக, மறுசீரமைப்பு ஆணையத்திடம் இது தெளிவாக வழங்குகிறது.




**According to the Constitution (131st Amendment) Bill, Lok Sabha seats will be increased to a maximum of 850 from the current 543 to "operationalise" the women's reservation law before the 2029 parliamentary polls, following a delimitation exercise based on the 2011 Census.**

- அரசியலமைப்பின் 170-வது சரத்தின் கீழ் மாநிலச் சட்டமன்றங்களில் புதிய இட மறு சீரமைப்பு மற்றும் தொகுதிகளை மறுவரையறை செய்ய இது வழி வகை செய்கிறது.
- 2026 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பிறகு தொகுதி மறுசீரமைப்பை ஒத்தி வைத்த சரத்து 170-இன் மூன்றாவது நிபந்தனையை இது நீக்குகிறது.
- மாநிலங்களுக்குள் உள்ள தொகுதி எல்லைகள் புதுப்பிக்கப்பட்ட மக்கள்தொகை தரவுகளின் அடிப்படையில் மறுவரையறை செய்யப்படுவதை இது உறுதி செய்கிறது.
- தொகுதி மறுசீரமைப்புக்குப் பிறகு உடனடியாக மக்களவை மற்றும் மாநிலச் சட்ட மன்றங்களில் பெண்களுக்கான மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த இது உதவுகிறது.

- 2023 ஆம் ஆண்டின் 106வது திருத்தச் சட்டத்தால் கொண்டுவரப்பட்ட தாமத நிபந்தனையை நீக்க, சரத்து 334A-ஐ இது திருத்துகிறது.
- நாடாளுமன்றத்தால் நீட்டிக்கப்படா விட்டால், 106வது திருத்தம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பெண்களுக்கான இடஒதுக்கீடு தொடரும் என்று இது கூறுகிறது.
- எதிர்காலத் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் பெண்களுக்கான ஒதுக்கப்பட்ட தொகுதிகள் சுழற்சி முறையில் வருவதை இது உறுதி செய்கிறது.
- மாநிலச் சட்டமன்றங்களில் பட்டியலிடப்பட்ட பழங்குடியினரின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க இது பாதுகாப்புகளை வழங்குகிறது.
- குறிப்பாக அருணாச்சலப் பிரதேசம், மேகாலயா, மிசோரம், திரிபுரா மற்றும் நாகாலாந்து போன்ற வடகிழக்கு மாநிலங்களில் பழங்குடியினருக்கான இடங்கள் குறைக்கப் படாமல் இருப்பதை உறுதி செய்ய இது சரத்து 332-ஐ திருத்துகிறது.

## மாநிலங்களவை துணைத் தலைவர்கள் குழு




- மாநிலங்களவை தனது அவையின் சுமூகமான செயல்பாட்டிற்காக துணைத் தலைவர்கள் குழுவை மறுசீரமைத்துள்ளது.
- பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தினேஷ் சர்மா, எஸ். பாங்னான் கொன்யாக், கன்ஷியாம் திவாரி, பூலோ தேவி நேதம், மு. தம்பிதுரை மற்றும் சஸ்மித் பத்ரா உட்பட ஆறு உறுப்பினர்கள் இதற்காகப் பரிந்துரைக்கப்பட்டனர்.
- தலைவர் மற்றும் துணைத் தலைவர் இல்லாத நேரங்களில் இக்குழுவின் உறுப்பினர்கள் அவைக்குத் தலைமை தாங்கி, விவாதங்களையும் ஒழுங்கையும் நிர்வகிப்பார்கள்.
- மாநிலங்களவையின் தலைவர் இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர் ஆவார், மேலும் துணைத் தலைவர் இந்த அவையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்.
- இக்குழு நிரந்தரமான அரசியலமைப்புப் பதவி அல்ல, உறுப்பினர்கள் சுழற்சி மற்றும் தற்காலிக அடிப்படையில் பணியாற்றுகின்றனர்.
- இந்த அமைப்பு நாடாளுமன்ற நடவடிக்கைகளின் தொடர்ச்சி, நெகிழ்வுத் தன்மை மற்றும் சுமூகமான செயல்பாட்டை உறுதி செய்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## முதல் BRICS சுகாதார செயற்குழு கூட்டம் 2026

- உலகளாவிய சுகாதார ஒத்துழைப்பு குறித்து விவாதிப்பதற்காக முதல் BRICS சுகாதார செயற்குழு கூட்டத்தை இந்தியா புது தில்லியில் நடத்தியது.
- சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், BRICS (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா) கட்டமைப்பின் கீழ் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்தது.
- மக்களை மையப்படுத்திய சுகாதாரப் பராமரிப்பில் கவனம் செலுத்தும் வகையில், "Building for Resilience, Innovation, Cooperation and Sustainability" என்பது இதன் கருத்துருவாக இருந்தது.
- பெருந்தொற்றுத் தயார்நிலை, சுகாதாரத் தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு (UHC) ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை இக்கூட்டம் நோக்கமாகக் கொண்டிருந்தது.
- ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் மற்றும் மனநலம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் போன்ற புதிய கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளை இந்தியா அறிமுகப் படுத்தியது.
- காசநோய் (TB) ஆராய்ச்சி, டிஜிட்டல் சுகாதாரம், பாரம்பரிய மருத்துவம், முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளுக்கான அணுகல் ஆகியவை முக்கியப் பகுதிகளில் அடங்கும்.




# பொருளாதாரச் செய்திகள்

## 6வது பெரிய பொருளாதாரம் - இந்தியா

- உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) தரவரிசையின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் இந்தியா 6வது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் (IMF) தெரிவித்துள்ளது.
- இந்தியாவின் GDP சுமார் 3.92 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும், மேலும் உலகளாவிய ஒப்பீட்டிற்காகத் தரவரிசைகள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுகின்றன.
- இந்தியா 5வது இடத்திலிருந்து சரிந்து இப்போது இங்கிலாந்து மற்றும் ஜப்பானுக்குப் பின்னால் உள்ளது; அதே வேளையில் அமெரிக்கா, சீனா மற்றும் ஜெர்மனி ஆகியவை முன்னிலையில் தொடர்கின்றன.
- இந்த மாற்றம் பலவீனமான உள்நாட்டு வளர்ச்சியால் அல்லாமல், முக்கியமாக இந்திய

ரூபாயின் வீழ்ச்சி மற்றும் அமெரிக்க டாலரின் வலுவடைதல் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ளது.

- வலுவான பொருளாதாரச் செயல்திறனைக் காட்டும் வகையில், இந்தியா ரூபாய் மதிப்பில் சுமார் 9% பெயரளவு GDP வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

**GDP at current prices ($tn)**

| Country | 2024 | 2025 | 2026 | 2027 | 2030 | 2031 |
|---|---|---|---|---|---|---|
| US | 29.3 | 30.8 | 32.4 | 33.8 | 37.7 | 39 |
| China | 18.9 | 19.6 | 20.9 | 21.9 | 26 | 27.5 |
| Germany | 4.7 | 5 | 5.5 | 5.6 | **6.18** | **6.35** |
| Japan | 4.19 | 4.44 | 4.38 | **4.56** | 5 | 5.13 |
| UK | **3.7** | **4** | **4.26** | **4.47** | 5.15 | 5.4 |
| **India** | **3.76** | **3.92** | **4.15** | **4.58** | **6.17** | **6.79** |


Source: IMF WEO

# சுற்றுச்சூழல் செய்திகள்

## முதல் வனவிலங்கு குற்ற வழக்கு

- மத்தியப் புலனாய்வுத் துறை (CBI) மூலம் வழக்காடப்பட்ட முதல் வனவிலங்கு குற்றமானது, வனவிலங்கு சட்ட அமலாக்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்தது.
- 1972 ஆம் ஆண்டின் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தை மீறி ஷாஹ்துஷ் சால்வைகளைச் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்ததற்காக டெல்லி நீதிமன்றம் ஒருவருக்கு தண்டனை வழங்கியது.
- மத்தியப் புலனாய்வுத் துறை, வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டுப் பணியகம், சுங்கத் துறை மற்றும் இந்திய வனவிலங்கு நிறுவனம் ஆகியவை கூட்டாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டன.
- திபெத்திய மான் வகையின் அடிப்பகுதி ரோமங்களில் இருந்து ஷாஹ்துஷ் கம்பளி பெறப் படுகிறது.
- பெரும்பாலான ஷாஹ்துஷ் தயாரிப்புகள் ஜம்மு காஷ்மீரில் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.
- CITES ஒப்பந்தத்தின் கீழ் 1975 ஆம் ஆண்டு முதல், ஷாஹ்துஷ் வர்த்தகம் உலகளவில் தடைசெய்யப்பட்டுள்ளது.
- சிரு என்று அழைக்கப்படும் இந்த மான் பந்தோலோப்ஸ் ஹோட்சோனி (*Pantholops hodgsonii*) என்ற அறிவியல் பெயரைக் கொண்டுள்ளது.
- இந்தியாவிற்கும் வலசை வரும் இது திபெத்தியப் பீடபூமி மற்றும் சீனாவின் சின்ஜியாங் மற்றும் கிங்காய் போன்ற குளிர்ச்சியான பகுதிகளில் வாழ்கிறது.
- வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அட்டவணை I மற்றும் IV, CITES-இன் கீழ் பின்னிணைப்பு I-இல் வைக்கப்பட்டுள்ள இது IUCN செந்நிறப் பட்டியலின் கீழ் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாக உள்ளது.
- சட்டவிரோத வேட்டையாடுதல், வாழ்விட இழப்பு மற்றும் கடுமையான சுற்றுச்சூழல்

நிலைமைகள் ஆகியவை இதன் முக்கிய அச்சுறுத்தல்களில் அடங்கும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு குறித்த சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) அறிக்கை




- மாறிவரும் தொழிலாளர் சந்தைகளில் அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு வழங்குவது குறித்த அறிக்கையைச் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வெளியிட்டது.
- இந்த அறிக்கை "Universal social protection in changing labour markets: Protecting workers in all types of employment" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- சமூகப் பாதுகாப்பு என்பது சுகாதாரப் பராமரிப்பு, வேலையின்மைக்கான ஆதரவு, மகப்பேறு பலன்கள் மற்றும் ஓய்வூதியம் போன்ற பலன்களை உள்ளடக்கியதாகும்.
- வறுமையைக் குறைப்பது, பொருளாதார நிலைத்தன்மையை மேம்படுத்துவது மற்றும் பாலின ஏற்றத்தாழ்வுகளைக் களைவது ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டு

உள்ளது.

- தற்காலிக ஒப்பந்தத் தொழிலாளர்கள், சுயதொழில் செய்வோர் மற்றும் அமைப்பு சாராத் தொழிலாளர்களைச் சமூகப் பாதுகாப்பு அமைப்புகளின் கீழ் கொண்டு வர வேண்டும் என இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

# மாநிலச் செய்திகள்

## கர்நாடகாவின் மாதவிடாய் விடுப்புக் கொள்கை




- மாதவிடாய் விடுப்புக் கொள்கையைச் சரத்து 21-இன் (வாழ்வதற்கான உரிமை) கீழ் அங்கீகரித்து, அனைத்துத் துறைகளிலும் அதனைக் கண்டிப்பாகச் செயல்படுத்துமாறு கர்நாடக உயர் நீதிமன்றம் மாநில அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.
- பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் 18-52 வயதுடைய பெண்களுக்கு மாதம் ஒரு நாள் மாதவிடாய் விடுப்பு வழங்குவதை இக்கொள்கை கட்டாயமாக்குகிறது.
- அமைப்புசார்ந்த மற்றும் அமைப்புசாராத் துறைகள் என இரண்டிலும் இக்கொள்கை சீராகச் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதல்களை வெளியிடுமாறு நீதிமன்றம் மாநில அரசுக்கு உத்தரவிட்டது.
- உயிரியல் வேறுபாடுகளை அங்கீகரிப்பது சரத்து 14-இன் கீழ் சமத்துவத்தை மீறுவதாகாது என்றும், மாறாக அது கண்ணியத்தையும் ஆரோக்கியத்தையும் ஆதரிக்கிறது என்றும் நீதிமன்றம் கூறியது.
- முன்மொழியப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டின் கர்நாடக மாதவிடாய் விடுப்பு மற்றும் சுகாதார மசோதா இக்கொள்கையை முறைப்படுத்தும்; மேலும், இது சட்டமாக்கப்பட்ட பிறகு தாமதமின்றி இதற்கான விதிகள் வகுக்கப்பட வேண்டும்.
- தொழிற்சாலைகள் சட்டம், கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், தோட்டத் தொழிலாளர் சட்டம், பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் வரும் தொழிலாளர்களுக்குத் தற்போதைக்கு இக்கொள்கை பொருந்தும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★